**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30 -ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.திருவேங்கடம், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.திருவேங்கடம், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.கோவிந்தராஜ். |
| கிராமம் | - அழிவிடைதாங்கி |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

30.08.2023

பி.வா.சா.1.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

எனது பூர்வீகம் குத்தனூர் கிராமம். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று நான் பிராது நகலை படித்து பார்த்தேன். வாதிகள் பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் 1ம் வாதியின் மாமனார் ஐயாகண்ணு என்கிற ஐயாதுரைக்கு பாத்தியப்பட்டது. மேற்படி ஐயாகண்ணு உயிருடன் இருந்த காலத்திலேயே 1ம் வாதியின் கணவர் குப்பன் என்பவருக்கு தாவா சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்து. குப்பன் என்பருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி செல்வி என்பவர். 2வது மனைவி வழக்கில் 1ம் வாதி வசந்தா என்பவர். 2 முதல் 4 வரையான வாதிகள் வசந்தாவிற்கு பிறந்தவர்கள். முதல் மனைவி செல்விக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் திருஞானம் ஆகியோர்கள் பிறந்தார்கள்.

2) திருஞானம் காலமாகிவிட்டார். 4 முதல்6 வரையான பிரதிவாதிகள்தான் திருஞானத்தின் வாரிசுகள். எனது மனைவிதான் 1ம் பிரதிவாதி முனியம்மாள். 8ம் பிரதிவாதி குப்பனின் தம்பி. 9, 10 பிரதிவாதிகள் 8ம் பிரதிவாதியின் மகன்கள். குப்பன் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்து குறித்து ஆவணங்கள் ஏதேனும் எழுதி வைத்துள்ளாரா என்றால் தாவா சொத்து குப்பன்தான் விற்பனை செய்தார். குப்பன் உயிருடன் இருக்கும் காலத்திலேயே தாவா சொத்துக்கள் அனைத்தையும் விற்பனை செய்துவிட்டார். குப்பன் யார் யாருக்கு சொத்துக்களை விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது. குப்பன் சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் இதுவரை நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்களை பெற்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

3) குப்பன் உயிருடன் இருந்த காலத்தில் முதல் மனைவிக்கோ முதல் மனைவியின் வாரிசுகளுக்கோ அல்லது 2வது மனைவிக்கோ அவரது வாரிசுகளுக்கோ ஆவணங்கள் ஏதேனும் எழுதி வைத்துள்ளாரா என்றால் அவர்களுக்கு பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். குப்பன் உயிருடன் இருந்த காலத்தில்தான் பாகம் பிரித்துக்கொண்டார்கள். பாகம் பிரித்துக்கொண்டதற்கான ஆவணங்களை என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் பாக பிரிவினை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.அ.1 ஆவணத்தின்படி தாவா பி-அட்டவணையில் 8வது அயிட்ட சொத்தில் 20 சென்ட் நான் கிரையம் பெற்றுள்ளேன். எனது கிரைய ஆவணத்திலும் குப்பன் தனது குடும்பத்தாருடன் பாகம் பிரித்துக்கொண்டு தனது பாக சொத்தை விற்பனை செய்துள்ளதாக எதுவும்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 3ல் 1 பாகம் தான் கிரையம் பெற்றுள்ளேன். பாகம் பிரிக்கப்படாத சொத்தாக உள்ளதால்தான் 3ல் 1 பாகம் என குறிப்பிட்டு எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4) நான் கிரையம் பெற்றுள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணப்படியான சொத்திற்காக மட்டும்தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன். நான் கிரையம் பெற்ற சொத்தை தவிர இதர தாவா சொத்துக்கள் யார் யாருக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்ற விவரமும் யார் யார் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்ற விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது. 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆவணப்படியான சொத்தை தவிர இதர தாவா சொத்தை குறித்து எந்தவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. நானும் இதர சொத்துக்கள் குறித்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து குப்பன் உயிருடன் இருந்தபோது பாகம் பிரித்துக்கொண்டதாக நான் சொல்வது பொய் என்றும் இதுநாள்வரை தாவா சொத்துக்கள் பாகம் பிரித்துக்கொள்ளப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) குப்பன்இறந்த பிறகும் 1 முதல் 4 வரையான வாதிகள் மற்றும் 1 முதல் 6 வரையான பிரதிவாதிகளுக்குள்ளும் இதுநாள்வரை பாக பிரிவினை எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பாகம் பிரித்துக்கொள்ளப்படாத காரணத்தால் 1 முதல் 4 வரையான வாதிகள் மற்றும் 1 முதல் 6 வரையான பிரதிவாதிகள் அனைவரும் கூட்டாகதான் இதுநாள்வரை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.